பொன்னேரியில் சிவில் கோர்ட்

*218 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரியில் சிவில் கோர்ட் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம், எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

கடலூர் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துக்கள்

* 219 வினா—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கடலூர் வட்டத்தில் நான்கு ஆண்டு காலமாக கணக்குகள் தணிக்கையே (Audit) செய்யப்படாமலிருக்கும் பஞ்சாயத்துக்கள் யாவை ?

(இ) தணிக்கை செய்யப்படாமைக்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) கடலூர் தாலுக்காவிலுள்ள எந்த பஞ்சாயத்தும் நான்கு ஆண்டுகளாக கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் இருந்ததில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் நான் போடும்போது, பல பஞ்சாயத்துகளில் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஆடிட் செய்யவில்லை. எனவே, 1967-ம் ஆண்டு இறுதியில் ஆடிட் செய்யப்பட்ட பஞ்சாயத்துக்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லையென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கணக்குகள் தணிக்கை செய்யப்படாமல் இருந்ததில்லை யென்றுதான் பதில் தரப்பட்டிருக்கிறது.

திரு. எ. கே. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, எல்லா பஞ்சாயத்துகளிலும் தணிக்கை செய்தாகிவிட்டது என்ற குறிப்பை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது, கடலூர் வட்டத்திலுள்ள பஞ்சாயத்துகளில் மட்டும் தணிக்கையாகி விட்டதா ? அல்லது எல்லா இடங்களிலும் உள்ள பஞ்சாயத்துகளில் தணிக்கையாகி விட்டதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கேள்வி கடலூர் வட்டத்தைப் பொறுத்தது.

திருப்பூரில் உள்ள மத்திய பஸ் நிலையம்

* 220 வினா—திரு. கு. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்பூர் நகரில் தற்போது உள்ள நகராட்சி மத்திய பஸ் நிலையம் வேறு இடத்தில் அமைக்க கேட்டு நகராட்சி மன்றம் அரசிடம் விண்ணப்பித்துள்ளதா ?